# சோளிங்கர் நகராட்சி

**2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12– ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை :– திருமதி தமிழ்செல்வி அசோகன் நகர்மன்றத் தலைவர்**

| மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 12.01.2024 | **பொருள்எண்.1**<br>சோளிங்கர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிராம சர்வே எண். 310–ல் 0.64 ஏக்கர் பரப்பில் குடியிறுப்பு மனைப்பிரிவு ஏற்படுத்திய மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடு சாலை மற்றும் மூலை முடுக்குகள் – 537.36 ச.மீ. பொது உபயோர் இடம் (Pp1) 43.91 ச.மீ. மின்சார வாரியத்திற்கு (E.B) – 38.20–ச.மீ. கொண்ட பொது திராவிடம் – 1 –120.56 ச.மீ. மற்றும் பொது திராவிடம் –2. 189.75 ச.மீ. பரப்பு இடங்களை இந்நகராட்சி ஆணையாளர் பெயரில் தான ஆவணம் எண்: 2870 நாள்: 10.08.2023ல் தானமான ஒப்படைக்கப்பட்டது. எனவே, மேற்படி ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடுகள் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.50977/2008/டிபி3 ,நாள்.05.02.2021 – படி தானமான ஒப்படைக்கப்பட்ட சொத்து விவரங்களை நகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்க ஏதுவாக மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.837/2023/எப்1 | நகர்மன்றத் தீர்மான எண்.**589** ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 12.01.2024 | **பொருள்எண்.2**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19 சுப்பாராவ் தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.**590** ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 12.01.2024 | **<u>பொருள்எண்.3</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17 பாண்டியநல்லூர் ரோடு 6 வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் கல்வெட்டு அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.7.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.**591** ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 12.01.2024 | **<u>பொருள்எண்.4</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24 ஜானகிராம் நகர் முதல் தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.**592** ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 12.01.2024 | **<u>பொருள்எண்.5</u>**<br>சோளிங்கர் நகராட்சியில் பொன்னை ஆற்றில் இருந்து நீருற்று கிணறுகளில் பெறப்படும் குடிநீர் நகராட்சி பகுதிகளில் உள்ள 27 வார்டுகளில் 9 வார்டுகளுக்கு நகராட்சி அலவலகத்தில் பின்புறம் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி சேகரம் செய்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மற்ற 18 வார்டுகளில் அந்தந்த பகுதிகளில் உள்ள நீர் ஆதாரத்தின் மூலம் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு அதே பகுதியில் உள்ள 11 இடங்களில் உள்ள மேல் நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் சேகரம் செய்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் விநியோகம் செய்யப்படும் பகுதிகளில் மின்மோட்டார் இயக்க தேவையான கீழ்கண்ட மின்சாதன பொருட்கள் அத்தியாவசிய பணிகளுக்கு போதிய இருப்பில் இல்லை எனவே அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள கீழ்கண்ட பொருட்களை கொள்முதல் செய்து பயன்படுத்திக்கொள்ள ஆகும் தோராய செலவின தொகை ரூ.3.00 ஆகும். 4 sq 3 core wire, 63A four pole MCB, 32A single pole MCB with Gang box, 7/16 Aluminium Wire, 4 Sq Aluminium wire, 2.5sq Copper wire, Stay wire, Water proof Tape, 4 pole Metal gang box, 7/16 sq with copper wire, 40w LED Tube light மற்றும் sealing Fan மேற்கண்ட மின்சாதன பொருட்களை கொள்முதல் செய்து கொள்ளளவும் செலவின தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண்.**593** ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலக்குறிப்பு :–<br>மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண். 749/2023/இ1) | |
| 12.01.2024 | **<u>பொருள்எண்.6</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2 மேற்கு போர்டின் பேட்டை 1 வது மற்றும் 2 வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.9.30 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.**594** ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 12.01.2024 | **<u>பொருள்எண்.7</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5 சோமசமுத்திரம் சாலையில் முரம்பு கொட்டி சமன் செய்து பேச் ஒர்க் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.70,000 ஆயிரத்திற்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.**595** ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 12.01.2024 | **<u>பொருள்எண்.8</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 சித்தூர் ரோடு 1 வது தெருவில் (பி.டி.ஓ ஆபிஸ் அருகில்) மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ 6.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.**596** ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 12.01.2024 | **<u>பொருள்எண்.9</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.07 செங்குந்தர் பெரிய தெருவில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பள்ளி கட்டிடத்தின் சமையற்கூடத்தினை மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.75,000 ஆயிரத்திற்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.**597** ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 12.01.2024 | **<u>பொருள்எண்.10</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.25 ஸ்ரீராம் நகர் பகுதியில் உள்ள பொது மக்களுக்கு மயான பகுதி தற்போது வரை ஏதும் இல்லாத காரணத்தால் ஏதேனும் இறப்பு நேர்ந்தால் 1 கி.மீ தொலைவில் எடுத்து செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது, எனவே மேற்படி பகுதியில் ஏதேனும் அரசுக்கு சொந்தமான இடத்தை மயானமாக ஒதுக்கீடு செய்து தரக்கோரி மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.**598** ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 12.01.2024 | **<u>பொருள்எண்.11</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.05 திருத்தணி சாலையில் உள்ள சோளிங்கர் மயானம் சோளிங்கர் பெரிய ஏரி கலங்கல் தண்ணீர் வெளியேறும் கால்வாயின் வடக்கு பகுதியில் அமைந்துள்ளது, கால்வாயின் குறுக்கே பெரிய பாலம் அமைந்துள்ளது, பாலத்தின் கீழ் பகுதியில் RCC பைப்லினான தரைப்பாலம் அமைந்துள்ளது, மழைக்காலங்களில் கால்வாயில் அதிக தண்ணீர் வெள்ளப்பெருக்கு ஏற்படும் போது மயானத்தை பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது, இதனால் வடக்கு பகுதியில் நெடுஞ்சாலை துறையினால் கட்டப்பட்டுள்ள பாலத்திலிருந்து சாய்வு தளம் கொண்ட பாலம் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.75.00 இலட்சம் ஆகும். நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்படி தொகையினை ஒதுக்கீடு செய்து தரக்கோரி சட்டமன்ற உறுப்பினரை கோர மன்றம் அனுமதி வழங்கலாம், மேலும் சட்டமன்ற உறுப்பினர் முழு தொகையினை ஒதுக்கீடு செய்ய முடியாத பட்சத்தில் சட்டமன்ற தொகுதியில் ஒதுக்கீடு செய்யப்படும் மதிப்பீடு தொகை போக மீத தொகையினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண்.**599** ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | (ந.க.எண். 2092/2023/இ1 ) | |
| 12.01.2024 | **<u>பொருள்எண்.12</u>**<br>சோளிங்கர் நகராட்சி பேரூராட்சியாக இருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக 01.11.2021 ஆம் தேதியில் தரம் உயர்த்தப்பட்டது, இந்நகராட்சியில் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ள டிராக்டர் TN73 1992 என்ற வாகனம் பயன்படுத்தப்பட்டு வந்தது, மேற்படி வாகனம் அடிக்கடி பழுதடைந்து சரி செய்யும் நிலையில் உள்ளது, மேலும் இவ்வாகனம் பேரூராட்சியாக காலத்திலிருந்து சுமார் 20 ஆண்டுகளாக தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது, தற்போது இவ்வாகனம் முழுவதும் மிகவும் பழுதடைந்து டிப்பர் உட்பட பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள பொது சுகாதார பணியாளர்கள் கால்வாய் தூர் வாரும் தினசரி பணியானது பாதிக்கப்படுகிறது, இதனால் புதியதாக டிராக்டர் இயந்திரம் கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவின தொகை ரூ.8.00 இலட்சம் ஆகும். மேற்படி தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு :-<br>1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட வாகனத்தை கொள்முதல் செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண். 2091/2023/இ1) | நகர்மன்றத் தீர்மான எண்.600 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 12.01.2024 | **<u>பொருள்எண்.13</u>**<br>இந்நகராட்சி அலுவலகத்திற்கு சொந்தமான பொது சுகாதாரம் மற்றும் பொறியாளர் பிரிவு வாகனங்களுக்கு நடப்பாண்டு (2024) காப்பீடு, தகுதிச்சான்று மற்றும் பழுதுகளை சரி செய்ய ஆகும் தோரய செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1286/2023/எச்1) | நகர்மன்றத் தீர்மான எண்.601 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 12.01.2024 | **<u>பொருள்எண்.14</u>**<br>சோளிங்கர் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிகள் மேற்கொள்ள கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2023-24 ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.4758.00 இலட்சம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 22.12.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண்.602 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| வ. எண் | பணியின் பெயர் | தொகை இலட்சம் ரூ. | குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | அதிகம் அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | சோளிங்கர் நகராட்சியில் வார்டு எண்.01 முதல் 27 வரை குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிகள் மேற்கொள்ளுதல் பணி | 4758.00 | M/s.RR Thulasi Builders (i) PVT LTD, Chennai – 600083 % மதிப்பீட்டை விட குறைவு | M/s. KMC Associates, Theni –625531 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக்குறிப்பு :–**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.RR Thulasi Builders (i) PVT LTD, Chennai –600083 என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 516/2022/இ1 )

| | | |
|---|---|---|
| 12.01.2024 | **பொருள்எண்.15**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.05 சல்லா சபாபதி நகரில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.603 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 12.01.2024 | **பொருள்எண்.16**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17 பாண்டியநல்லூர் ரோடு 1 வது தெரு மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ 5.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–** | நகர்மன்றத் தீர்மான எண்.604 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | |
| 12.01.2024 | **<u>பொருள்எண்.17</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 அண்ணா நகர் 5 வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ 4.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.605 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 12.01.2024 | **<u>பொருள்எண்.18</u>**<br>இந்நகராட்சியில் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ள டிராக்டர் TN73 1992 என்ற வாகனத்தில் ரேடியேட்டர் புதியதாக மாற்றுதல் மற்றும் ஆயில் சர்வீஸ் செய்தல் போன்ற இதர பணிகள் மேற்கொள்ள தோராய செலவின தொகை ரூ.40,000 ஆகும். புதிய வாகனம் கொள்முதல் செய்யும் வரை மேற்படி பழுதுகள் சரிசெய்து பொது சுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பழுதுகளை சரிபார்க்கவும் செலவின தொகைக்கும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு :–<br>1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண். 2091/2023/இ1) | நகர்மன்றத் தீர்மான எண்.606 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 12.01.2024 | **<u>பொருள்எண்.19</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.09 ஏரிக்கரை தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ 9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது. மேலும் பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.607 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 12.01.2024 | **<u>பொருள்எண்.20</u>**<br>சோளிங்கர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலையில் இருபுறங்களில் உள்ள சிறிய வகை முட்புதர்களை அகற்ற கட்டிங் மிஷின் கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.50,000/– பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br>அலுவலக்குறிப்பு :–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.749/2023/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.608 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

(ஓம்)தமிழ்செல்வி அசோகன்
நகர மன்ற தலைவர்
சோளிங்கர் நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்
சோளிங்கர் நகராட்சி